**ஓம் ஶ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்**

**வினா விடை நேரம்**

**வினா எண் 318**

**தலைப்பு**

**"சத்யம்- தர்மம்- மனமாற்றம்"**

**மே 4, 2024**

எங்கள் அன்பிற்குரிய பேராசிரியர் திரு.அனில்குமார் சாய்ராம் சாரின் சத்யோபநிஷத் தொகுதி இரண்டு, பக்கங்கள் 291-295 லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி பதில் பகுதி

கேள்வி :ஸ்வாமி நம் முன்னோர்கள் சத்யம் என்ற பண்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள்.
ஆனால் தற்காலத்தில் அப்படி இல்லை.
சத்யத்தை கடைபிடிக்க வேண்டியது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததா ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
மனிதன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய பண்புகளில் சத்யம் மிக உயர்ந்ததாகும்.
சத்யமே கடவுள்.
சிருஷ்டி அனைத்தும் சத்யத்திலிருந்தே தோன்றின.
சிருஷ்டி அனைத்தும் சத்யத்திலியே போய் ஒடுங்கப்போகின்றன.
சத்யமே மனிதன் தர்மத்தின் வழியில் நின்று அறம் பிறழாமல் வாழ ஆதாரமாகும்.
அறத்தை கடைபிடிக்கும் போது மன அமைதியும் ஆனந்தமும் கிட்டுகிறது.
வாழ்கையே அன்புமயமாகி இனிதாக மாறுகின்றது.
ஹரிச்சந்திரனின் சரித்ரம் இன்றளவும் கொண்டாடப்படுவது ஏன்.அவன் சத்யத்திற்காக அனைத்தையும்-மனைவி மகன் அரசபதவி என்று அனைத்தையும் தியாகம் செய்ததனால்தானே.

பிரகல்லாதன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் என்ன நடந்தது தெரியுமா.
ஒரு நாள் ஓர் அழகிய தேவதை அவன் நாட்டை விட்டு வெளியேறி சென்று கொண்டிருப்பதை பார்த்தான்.
தேவதையே நீ யார் என கேட்டான்.நான் தான் நன்னடத்தை என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.
மறு நாள் மற்றொரு தேவதை நான் ராஜ்யலக்ஷ்மியான செல்வத்தின் அதிபதி என சொல்லிவிட்டு வெளியேறியது.

மூன்றாவது நாள் நான் நற்பெயர் எனும் கீர்த்தியாகும் என சொல்லி மற்றொரு தேவதையும் நாட்டை விட்டு வெளியேறியது.
அடுத்த நாள் மிகவும் கம்பீரமான தோற்றம் கொண்ட தேவதை நான் தான் சத்யம் என்ற சொல்லி
வெளியேற முயன்றபோது பிரகலாதன் தாயே என்று சொல்லியபடி அந்த தேவதையின் காலில் வீழ்ந்து தாங்கள் என் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என மன்றாடினான்.
தேவதையும் மனமிரங்கி அவன் நாட்டிலேயே இருக்க சம்மதித்தது.உடனே என்ன நடந்தது தெரியுமா.ஏற்கனவே வெளியேறி சென்ற மற்ற தேவதைகளும் ஒன்றன் பின் ஒன்றாக பிரகலாதன் நாட்டுக்கு திரும்பி வந்து விட்டன.
இதிலிருந்து என்ன தெரிகிறது.சத்யம் என்ற மேலான நற்பண்பு மட்டும் இருந்து விட்டால் மற்ற நற்பண்புகளான
நன்னடத்தை ராஜ்யலஷ்மி மற்றும் நற்கீர்த்தி இவை எல்லாம் தானாகவே கிடைத்துவிடும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தர்மம் என்ற பதத்தின் உண்மையான அர்தத்தை நாங்கள் அறிந்திருக்க வில்லை.அதை முழுமையாக எங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க முடிவதில்லை.
பண்டிதர்கள் அதை பல விதமாக விள்குகிறார்கள்.சூழ்நிலையை பொறுத்து அவை மாறுபடுவதால் எங்களுக்கு குழப்பம் உண்டாகிறது.தயவுசெய்து தர்மம் என்ற நடத்தை பண்பை பற்றி எங்களுக்கு விளக்கி சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
நமது முன்னோர்களும் பண்டிதர்களும் உபதேசித்தவைகளை நீங்கள் சரிவர புரிந்து கொள்ள வேண்டும்.
நமது மறை நூல்கள் சத்யத்தை விட உயர்ந்த தர்மம் எதுவுமில்லை என்றும் எல்லா தர்மங்களுக்கும் ஆதாரம் சத்யமே என்றும் கூறுகின்றன.
அதே மறை நூல்கள் அஹிம்ஸையே தர்மங்களுக்கெல்லாம் ஆதாரம்,அதுவே உயர்ந்த தர்மம் என்றும் கூறுகின்றன.
இங்கே உண்மை யான அஹிம்ஸை என்பது என்ன என நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.மனம் சொல் செயல் இந்த மூன்றாலும் யாருக்கும் தீங்கு விளைவிக்காமல் இருப்பதே உண்மையான அஹிம்ஸையாகும்.
சத்யத்தை கடைபிடிக்கும் ஒருவர் யாருக்கும் ஒரு போதும் தீங்கிழைக்க மாட்டார்.இவ்வாறாக சத்யத்தை கடைபிடிப்பதாலேயே அவர் அஹிம்ஸையையும் கடைபிடிப்பவராகின்றார்.
வேதங்களே தர்ம மூலம் ஆகும்.வேதங்களோ இந்த உலகில் பிறந்துவிட்ட மனிதர்கள் வேள்வி யாகங்கள் இதர சடங்குகளை தவறாமல் செய்ய வேண்டும் என விதித்திருக்கிறது.எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளிலிருந்து தவறக்கூடாது.
ஒவ்வொருவரும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஸ்வதர்மாவை அனுசரிக்க வேண்டும். அதுவே ஆத்ம தர்மம் என்றும் பகவத் கீதை கூறுகின்றது.

அதே போல் நான்கு வர்ணங்களுக்கு உண்டான தர்மங்களும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது
இந்த உலகில் கறுப்பு வெள்ளை மஞ்சள் பழுப்பு என்ற நிறங்களை கொண்ட மனித இனங்களை நாம் எல்லா தேசங்களிலும் காணலாம்.
தனி மனித வாழ்கையின் நான்கு நிலைகளான பிரம்மசர்யம்,கிரஹஸ்த்தம்,வானப்ரஸ்த்தம்,சன்யாசம் இவைகளுக்கான கர்ம விதிகளும் வேதங்களில் கூறப்பட்டுள்ளது
இந்த கர்மங்களை செயல்படுத்தி
ஆன்மீக பயற்சிகளில்ஈடுபட்டு வந்தால் ப்ரம்மஞானம் பெற முடியும்.
எனவே அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களில் ஈடுபட்டு ஸ்வதர்மாவை கடைபிடிக்க வேண்டும்.
தர்மம் என்ற அறம் மிகவும் நுணுக்கமானது.சத்யம் என்ற உயிர் சத்து வார்த்தைகளில் இருப்பது போல் தர்மம் என்பது அறம் சார்ந்து செயல்களில் ஈடுபடுவதேயாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நல்ல மனமாற்றம் என்பது எவ்வாறு எப்போது ஏற்படும் ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:
நீங்கள் எல்லோரும் மனம் என்பதை இதயம் என்பதாக தவறாக புரிந்து கொள்கிறீர்கள்.
இங்கே மனம் என்பது உங்கள் மார்பின் இடது புறத்தில் உள்ள இதயத்தை குறிப்பதில்லை.
இந்த மனம் என்பது எங்கும் நிறைந்த ஆன்மீக இதயமாகும்.இது தெய்வீகத்தை உணர்ந்த நிலையை குறிக்கின்றது.இது என்றும் மாறாதது.
நல்ல மனமாற்றம் என்பது மிக முக்கியமானது.ஏனென்றால் மனம் என்பதை வைத்துதான் மனிதன் என்று அழைக்கப்படுகின்றான்.மனிதன் மரணம் அடையலாம்.ஆனால் அவன் மனதுக்கு மரணம் இல்லை.
மனிதனை உலகத்தினுடன் பந்தப்படுத்துவதும் அந்த பந்தங்களிலிருந்து விடுவிப்பதும் மனமேயாகும்.
மனம் வெளிப்புறமாக பாயும் போது அது ஆசை காமம் கவலை இவைகளால் பீடிக்கப்படுகிறது.இதுவே ப்ரவித்தி மார்க்கம்.வெளி உலக ஈடுபாடு குறைந்து மனம் அடங்கும் போது அது நிவித்தி மார்கமாகும்.
உலகியல் விருப்பங்கள் குறைய குறைய அது ஆனந்த்தையும் அமைதியையும் அனுபவிக்கச் செய்கிறது.
இதுவே நல்ல மனமாற்றம் என்பதாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் கர்ம மார்கம் பக்தி மார்கம் ஞான மார்கம் என்ற மூன்று வழிமுறைகளையும் எவ்வாறு அனுசரிக்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :

உங்கள் கை கடிகாரத்தில் விநாடி -நிமிடம் - மணி என மூன்று கால அளவுகளை காட்டும் கம்பிகள் இருக்கின்றன அல்லவா.
விநாடியை குறிக்கின்ற கம்பி அறுபது முறை சுற்றிய பிறகுதான் நிமிடத்தை குறிக்கின்ற கம்பி ஒரு முறை நகரும்.
அது போல் நிமிடத்தை குறிக்கின்ற கம்பி அறுபது முறை சுற்றி வந்தால்தான் மணியை குறிக்கின்ற கம்பி ஒரு முறை நகரும்.இங்கே விநாடியை குறிக்கின்ற கம்பி தன்னலமில்லாது செயல் புரிதல் என்ற கர்ம மார்கத்தையும் நிமிடத்தை குறிக்கின்ற கம்பி இறைவன் மேல் பக்தி செலுத்துவது என்ற பக்தி மார்க்கத்தையும் மணியை குறிக்கின்ற கம்பியானது தன்னை அறிந்து கொண்டு தெய்வீகத்தையும் அறிந்து கொள்ளகின்ற
ஞான மார்கத்தையும் காட்டுவதாக எடுத்து கொள்ளலாம்.

இன்னொரு உதாரணத்தையும் பார்க்கலாம்.
நீங்கள் விடுமுறைக்கு உங்கள் சொந்த ஊருக்கு இரயிலில் செல்வதாக வைத்து கொள்வோம்.
நேரடியாக உங்கள் ஊருக்கு செல்கின்ற விரைவு ரயிலிலே நீங்கள் பயணிக்கலாம்.
அல்லது ஒரு ரயில்வே சந்திப்பில் உங்கள் பெட்டி மட்டும் கழட்டப்பட்டு வேறொரு ரயிலில் இணைக்கப்பட்டு அதில் உங்கள் ஊருக்கு செல்லலாம்.
இல்லையென்றால் ஒரு ரயிலில் சென்று ஓரிடத்தில் இறங்கி அங்கே வேறொரு ரயிலை பிடித்தும் உங்கள் ஊருக்கு செல்லலாம்.
இங்கே கர்ம மார்கம் என்பது பேஸன்சர் வண்டி பயணத்தையும்,பக்தி மார்க்கம் என்பது வழியில் உங்கள் பெட்டி வேறொரு ரயிலில் இணைக்கப்பட்டு செல்வதை போலவும்,ஞான மார்க்கம் என்பது எக்ஸ்பிரஸ் ரயில் பயணத்தையும் போன்றதாகும்.

அனைவருக்கும் நன்றி.
வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்!